பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 318 பிரசோற்பதி கார்த்திகை 11 27 - 11 - 1991 புதன்

## ஒவ்வொரு குடும்பத்துக்கும் 1/2லீ. வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது

ஒவ்வொரு குடும்பத்துக்கும் அரை லீற்றர் மண்ணெண்ணெய் 5 ரூபா வீதம் வழங்குவதற்கு செயலக செயத்திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் முதற்கட்டமாக நடவடிக்கை எடுத்துள்ளார். வெளி இறைபணத்திடமிருந்து கடன் அடிப்படையில் 500 பேரல்கள் மண்ணெண்ணெய் பெறப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பல நோ. கூ. சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட மண்ணெண்ணெய் அளவு விபரங்களை செயலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. கிராமிய பாதுகாப்பு பாலனையாளர் சங்கங்களின் மூலம் மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெறும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. 25

## பால்மா தட்டுப்பாட்டை நீக்க அடுத்த கப்பலில் தருவிக்க ஏற்பாடு

யாழ் மாவட்டத்தில் தற்போது நிலவும் பால்மா தட்டுப்பாட்டை நீக்க செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது அடுத்து வரும் கப்பலில் இவற்றை அனுப்பிவைக்குமாறு கொழும்பில் தங்கியுள்ள யாழ் அரச அதிபர் க. மாணிக்கவாசகருக்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் மூலம் செயற்திட்டப் பணிப்பாளரால் அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. லக்டோஜன் 1/2 கிறீம் 16,000 பெட்டிகள், லக்டோஜன் முழு கிறீம் 15,000 பெட்டிகள், அங்கர் 15,000 பெட்டிகள், நெஸ்பிறே 5,000 ஆகியனவே இங்கு உடனடியாக வந்து சேரவிருப்பதாகவும், இவை கொழும்பு விலையில் விற்கப்படும் எனவும் செயற்திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார். 25

## தமிழக முன்னாள் ஐ.ஜி.பி. மரணம் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது


கருணாநிதியின் தி.மு.க ஆட்சிக்காலத்தில் பொலிஸ் மா அதிபராக இருந்த பொ. துரை என்பவரின் மரணம் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளதாக தமிழ்நாட்டுச் சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது ராஜீவ் காந்தியின் கொலையோடு இவர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற ஐயப்பாட்டின் பேரில் பொலிஸ் விஷேட புலனாய்வுத்துறை இவரைக் கைது செய்ய உத்தேசித்திருந்ததாகவும் அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் நோய்வாய்ப்பட்டு இறந்ததாகக் கூறப்படினும், இவர் விசாரணையைத் தவிர்ப்பதற்குத் தற்கொலை புரிந்திருக்கலாம் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. சாதாரண பொலிஸ் ஆணை

.. 04ஆம் பக்கம் பார்க்க

★ சுதந்திரப் பசியுடைய மக்களை சோற்றுப்பசி தீண்டப்போவதில்லை

# போரா, சமாதானமா என்பதை எதிரியே தீர்மானிக்கட்டும்!

## தலைவர் பிரபாகரன் விடுத்த செய்தி



களைத்துப் போனவனின் இறுதி ஆயுதமாக உணவுப்போர் எமது மக்கள் மீது தொடுக்கப்படலாம். பட்டினித் தீயால் மக்களின் மன உறுதியைச் சுட்டெரிக்க எதிரி முயற்சிக்கலாம். ஆனால் சுதந்திரப் பசியில் உறுதி பூண்ட மக்களை சோற்றுப் பசி தீண்டி விடப்போவதில்லை. இன்று நாம் எதிர் கொள்ளும் இந்த நெருக்கடியான சூழ் நிலையில் எதிரியின் எந்தச்சவாலுக்கும் நாம் முகம் கொடுக்க தயாராக இருக்க வேண்டும். எமது மன உறுதிக்கு எதிரி சவால் விடுக்கின்றான். இந்த சவாலை ஏற்பதற்கு எமக்கு ஆன்ம உறுதியைத் தவிர வேறு ஆயுதங்கள் தேவையில்லை.

இவ்வாறு மாவீரர் தினத்தையொட்டி தலைவர் வே. பிரபாகரனால் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள அரசானது ஒருபுறம் போர்க் கொடியை உயர்த்திக் கொண்டு மறுபுறம் சமாதானச் சமிக்ஞைகளை காட்டுகின்றது.

நாம் சமாதானத்திற்கும் தயார், போருக்கும் தயார். சமாதானத்தின் வழியைத் திறப்பதா அல்லது யுத்தத்தின் பாதையில் செல்வதா களைத் திறந்து விட்டிருக்கின்றோம் சமாதான வழிமுறையில் சமரசப் பேச்சுக்களை நடத்த நாம் தயார்.

எந்தவித அழுத்தங்களுமின்றி, எத்தகைய ஆதிக்கமுமின்றி, சமத்துவத்தின் அடிப்படையில் நீதியின் அடிப்படையில் நிபந்தனையின்றி, பேச்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவிற்கு மற்றுமோர் ரயில் சேவை

## மாவீரர் தேசிய விழா

இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் மாபெரும் தேசிய விழா நடைபெறும். இந்நிகழ்வினை ஆரம்பிக்கும் வகையில் ஆண், பெண் தமிழீழக் காவல்துறையினரும் போராளிகளும் இணைந்த அணிவகுப்பு மரியாதை இடம் பெறும். இவ்வணிவகுப்பு மரியாதை திருநெல்வேலிச்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வங்காலையில் பொறி வெடி

நேற்று முன்தினம் மன்னார் வங்காலையில் ஏற்கனவே புதைத்து வைக்கப்பட்டிருந்த பொறி வெடியில் படையினரின் ட்ரக் வண்டி ஒன்று சிக்கியது எனினும் வாகனத்தின் பின்புறமே சிறுசேதமடைந்ததாக கூட்டுப்படை தலைமையகம் நேற்று தெரிவித்தது.

## வீரமரணம்

மண்டைதீவில் நடந்த வியாழனன்று நடைபெற்ற மோதலில் புனைக்கல் (சி. புவனேந்திரன் போராளி) வீரமரணமடைந்தார்.

## கொம்படிப்பாதையில் நேற்று வை-12 விமானம் குண்டு வீச்சு

கொம்படி பாதை, வீசித் தாக்குதல் நடாத்தினர். அதன் படகோட்டியான

...சமாதானத்தின் வழியைத் திறப்பதா அல்லது யுத்தத்தின் பாதையில் செல்வதா என்பதனை எதிரி தான் தீர்மானிக்க வேண்டும்.

நாம் சமாதானத்தின் கதவு

## ரயில் சேவை

நேற்று முன்தினம் முதல் வவுனியாவுக்கு மேலதிக ரயில் ஒன்று விடப்படுகிறது. கொழும்புக் கோட்டையிலிருந்து பிற்பகல் 2 மணிக்கு புறப்படும் இந்த ரயில் அனுராதபுரம் வந்தடைந்து அங்கிருந்து 7.15 மணிக்கு புறப்பட்டு இரவு 8.20க்கு வவுனியாவை வந்தடையும்.

இந்த ரயில் பின்னர் மறுநாள் அதிகாலை 3.15க்கு புறப்பட்டு அனுராதபுரத்தை சென்றடைந்து காலை 4.20க்கு அங்கிருந்து புறப்பட்டு கொழும்பை சென்றடையும்.

கொம்படிப்பாதை, கோயில்வயல் வெளிப்பகுதியில் நேற்றுக்காலை 7 மணியளவில் வை - 12 விமானம் திடீரென ஐந்து குண்டுகளை வீசித் தாக்குதல் நடாத்தியது.

இதனால் அப்பகுதியில் வள்ளத்தில் வந்துகொண்டிருந்த இருவர் காயமடைந்தனர். அதன் படகோட்டியான செபஸ்தியான் சிவஞானம் (20) முரசுமோட்டை யாழ் பெரியாஸ்பத்திரியில் அனு

...04 ஆம் பக்கம் பார்க்க

மாவீரம் காட்டியதால் தமிழர் தங்கள்
மானத்தைக் காத்த அவர் பெயர்கள் சொல்லி
நாவாரத் துதித்திடுவோம் பரணிபாடி.
நாட்டிடுவோம் அவர் புகழை! நாளை இந்தப்
பூவுலகில் தமிழர்க்கோர் தன்னாதிக்கம்
புது நாளாய் பூக்கின்ற பொழுதை நோக்கிக்
கூவட்டும் பூங்குயில்கள்! சேவல் யாவும்
'கொக்கரகோ' ஒலிக்கட்டும்! இருளை நீக்கித்
தாவிவரும் உதயகதிர் போலே அந்தத்
தமிழீழம் உதிக்கட்டும் - தரணி வாழ்த்த!

## இன்று
## மாவீரர்களின்
## நீங்காத நினைவுகளை
## சுமந்து நிற்கும்
## தமிழீழ மாவீரர் தினம்

(மாவீரர் வார மகத்தான நிறைவு நாள்)

# மன்னாரில் குண்டு வீச்சு
# ஐந்து பொதுமக்கள் பலி

மன்னாரில் நேற்று முன்தினம் நடைபெற்ற விமானத் தாக்குதலில் 5 பொதுமக்கள் பலியாகினர் நால்வர் காயமடைந்தனர். வைத்தியசாலை பாலர் பாடசாலை இரு வீடுகள் ஆகியன முற்றாகச் சேதமடைந்தன.

நேற்றுமுன்தினம் காலை மன்னார் வெள்ளாங்குளம் பகுதியிலும் இரு பொம்மர்களும் அவ்ரோவும் தாக்குதலை நடாத்தின இதனால் வெள்ளாங்குளத்தைச் சேர்ந்த பிரான்ஸிஸ் ஜெசிந்தா

— 04 ஆம் பக்கம் பார்க்க

## நாகராஜன் கைதுக்கு கருணாநிதி கண்டனம்

தமிழக அரசின் முன்னாள் உள்துறை செயலாளர் ஆர் நாகராஜன் கைது செய்யப்பட்டமைக்கு தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட விதியைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியான தி.மு.க வை அழிக்க ஜெயலலிதாவின் அ.தி.மு.க அரசு முயல்கிறது எனவும் கலைஞர் கருணாநிதி தமது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை சென்னையில்

— 04ஆம் பக்கம் பார்க்க

## மடு அகதிமுகாம் பகுதியில் சில பொருள்களுக்குத் தட்டுப்பாடு

மடு அகதிமுகாம் பகுதியில் மண்ணெண்ணெய், சவர்க்காரம் போன்ற பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

தற்போது இங்கு 27 ஆயிரம் அகதிகள் தங்கியிருப்பதாகவும், மூவாயிரம் அகதிகள் தற்காலிகமாக விவசாயம் செய்வதற்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளதாக

—04 ஆம் பக்கம் பார்க்க

## தலைவர் பிரபாகரனுக்கு நல்லாசி வேண்டி பூசை

தமிழினத்தின் தேசியத் தலைவரான வே. பிரபாகரனின் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு இறைவனின் ஆசி வேண்டி நேற்று மாலை இணுவில் பொது மக்களால் இணுவில் சிவகாமி அம்மன்

—04 ஆம் பக்கம் பார்க்க

விசேட வர்த்தமானி மூலம் அறிவிப்பு

# யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட உறுப்பினர் தொகையில் குறைப்பு!

## வன்னியில் ஒருவரால் தொகை அதிகரிக்கும்

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்தத் தொகையில் ஒன்று குறைக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு தேர்தல் மட்டத்திலும் அடுத்துத் தெரிவு செய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பட்டியல் ஒன்றை தேர்தல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது யாழ்ப்பாணம், காலி, மாத்தறை மாவட்ட மொத்த உறுப்பினர்களின் தொகையில் தலா ஒவ்வொன்று குறைக்கப்படும் வன்னி, திகாமடுல்ல, நுவரேலியா ஆகிய தேர்தல் மாவட்டங்களில் தலா ஒவ்வொரு அங்கத்தவர்கள் கூடுதலாகத் தெரிவு செய்யப்படுவர்.

ஏனைய மாவட்டங்களில் மொத்த அங்கத்தவர்களின் தொகையில் எந்த மாற்றமும் இருக்காது. இதன்படி பாராளுமன்ற மொத்த அங்கத்தவர்களின் தொகை 196 ஆகவே இருக்கும் - அதில் மாற்றமிருக்காது. இவ் மாற்றம், விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரச நில அளவையாளர்களின் அலுவலகப்படிப்பணம் அதிகரிப்பு

இலங்கை அரச நில அளவையாளர்களுக்கு வழங்கப்படும் அலுவலகப்படிப் பணம் அதிகரிக்கப்படவுள்ளது.

கடந்த திங்கள் இரவு நில அளவையாளர் சங்கம் அமைச்சு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சை அடுத்து இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சங்கத்தின் மூன்று கோரிக்கைகளும் ஏற்கப்பட்டுள்ளன.

இதனை வருத்து நில அளவையாளர் சங்கம் மேற்கொண்டு வந்த சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் கைவிடப்பட்டுள்ளது.

## தொழில் கற்கை நெறிகளுக்கு வவுனியா கல்லூரியில் முன்னுரிமை

கடந்த 20-ம் திகதி வவுனியாவில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட வவுனியா பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரி அந்தந்தப் பகுதிகளின் மூலவளங்களினூடான தொழில் சார் கற்கை நெறிகளுக்கு முன்னுரிமை வழங்கும்.

இவ்வாறு மேற்படி இணைப்புக் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி என். மோகனதாஸ் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது; எதிர்வரும் ஜனவரி மாதம் மாணவர் அனுமதிக்கப்படுவர் என்றும் கல்லூரியின் தரத்தை நிர்ணயித்து உறுதி செய்வதில் யாழ் பல்கலைக் கழகம் உறுதுணையாயிருக்கும் என்றும் கூறினார்.

## வடபிராந்திய வர்த்தக ஊழியர்களுக்கு நான்கு அம்சச் சலுகைத் திட்டம்

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் வர்த்தக ஊழியர்களுக்கு உதவுமுகமாக நான்கு அம்சச் சலுகைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தை எதிர்வரும் புத்தாண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சலுகைத் திட்டத்தின் கீழ் சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஊழியர் மரணமடைந்தால் அவருடைய மரணச் செலவுக்காக மூவாயிரம் ரூபா இலவசமாக வழங்கப்படும்.

அங்கத்தவரின் குடும்பத்தில் நிகழும் வைபவங்களுக்காக இரண்டாயிரம் ரூபா வட்டியில்லாக் கடனாக வழங்கப்படும்

ஊழியருக்கு மாறா நோய்கள் ஏற்படும் பட்சத்தில் வைத்தியச் செலவுக்காகச் சங்கத்தால் ஒரு தொகைப் பணம் நன்கொடையாக வழங்கப்படும். (14)

## உங்களுடையதா?

பி முருகையா என்பவருக்குரிய மோட்டார் சைக்கிள் திறப்பு ஒன்று கேரதீவு வீதியில் கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## இ. தொ. க. வின் புதியகிளை வவுனியாவில் திறப்பு

வவுனியா நகரில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் புதிய கிளையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் தொண்டமான், செயலாளர் அமைச்சர் செல்லச்சாமி ஆகியோர் கடந்த சனிக்கிழமை இக்கிளையைத் திறந்து வைத்தனர்.

## புதிய அரசியல் முன்னணியை ஸ்ரீமாவோ ஆரம்பிக்கிறார்

எதிர்க்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா, அனுருத்த ரத்வத்தை, ஐதேகட்சி அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த காமினி திஸநாயக்க ஆகியோர் இணைந்து புதிய அரசியல் கட்சி ஒன்றினை உருவாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்பதே அந்தப் புதிய கட்சியின் பெயர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் புதிய தலைவராக ஏ ஸி குணரத்தினாவையும் பொதுக் காரியதரிசியாக சூரியவன்ச திசாநாயக்காவையும் நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் இப்புதிய கட்சியில் அனுரா பண்டாரநாயக்கா சேர்க்கப்படமாட்டார் எனவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இங்கு முத்திரை அனுப்புவதில் தபால் பகுதி அசட்டை!

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு இதுவரை வந்து சேர்ந்த நான்கு கப்பல்களிலும் (தபால்) முத்திரைகள் வரவில்லை.

மாவீரர் வாரம்

போர்க்காலச் சிந்தனை: 7

## வீரனின் சூளுரை

''வீரரை வியவாப் பகைவரென் திறனைச்
சோரப் பழித்திச் சுட்டனர் நாவால்;
ஓரம் காட்டி ஓட்டுவன் இவரை! இன்றேல்
என்தாய் வம்பாய் இருந்தனள் என்க!

வீரருடைய போராண்மையை வியந்து பேசத் தெரியாத பகைவர்கள் என்னுடைய போர்த்திறனைக் கொச்சைப்படுத்தி நாவினால் கூச்சமின்றிச் சுட்டனர். 'இந்த வடு மாறும்படியாக, அப்படிச் சொன்ன பகைவரை ஓரம் காட்டி ஓட, ஓட விரட்டேனாகில், என் தாய் என்னை வம்பிலே பெற்றெடுத்தாளாகுக!' என்று சபதம் செய்து சாதனையும் புரிந்தான் ஓர் மறவன். என்னே இவனின் ஓர்மமும் துணிவும்!

இதேபோன்று சோழன் நலங்கிள்ளி என்பவன்;
''ஆற்ற லுடையோ ராற்றல்போற் றாதென்
உள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதின்
துஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ வரிதே
..........................................
.......................... சென்றவன்

வருந்தும் போரே எனாயிற் பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே''

என் உள்ளத்தை இகழ்ந்த அறிவில்லாதோன், துயில்கின்ற புலியை இடறிய குருடன் போலப் பிழைத்துப் போதலோ அரிது அவன் வருந்தும்படி போர் புரியேனாயின் தம் நெஞ்சிலே காதல் கொள்ளாத பொதுப் பெண்டிர் மார்பில் என் மாலை புரளுவதாகுக என்று வஞ்சினம் உரைத்தான். வீரம் விளைகின்ற தமிழ் நிலத்தில் சோரம் போவரா நம் மறவர். தீரம் அவர் சொல்லிலும் செயலினும் மிளிர்ந்தது!

— முருகனடியான்

## யாழ் லொறி உரிமையாளர்களிடம் லஞ்சம் பெற்ற 13 பொலிஸார் கைது!

யாழ் நோக்கி வந்து கொண்டிருந்த உணவு லொறி உரிமையாளர்களிடம் லஞ்சம் பெற்றதாக 13 பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் 13 பேரும் மதவாச்சி, ரன்மாவ, வெள்ளைப்புவ பொலிஸ் தடை நிலையங்களில் கடமை புரிந்தவர்களாவர்.

இந்த 13 பொலிஸாரும் தற்பொழுது இரகசியப் பொலிஸாரின் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

## தீருவில் மாவீரர் சதுக்கத்தில் இன்று சிலைதிறப்புவிழா

தீருவில் மாவீரர் சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள, தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதற்கான போராட்ட வடிவத்தை வெளிக்காட்டும் போராளிகள் சிலை திறப்பு விழா இன்று 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஏழு போராளிகளின் சிலை ஓவியர் ரமணி அவர்களினால் உருவாக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சிக்கான உரம் பருத்தித்துறையில் இறக்கப்படும்

புதிய கட்சியின் பெயர் என தகவல்கள் தெரிகின்றன. துறைக்கு இதுவரை வந்து

# யாழ், கிளி. மாவட்டங்களில்

# வாக்காளர் தொகை குறைகிறது

யாழ் தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் தொகை குறைவடைந்து செல்வதாகத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதே போன்று காலி மாத்தறை மாவட்டங்களிலும் வாக்காளர் தொகையில் வீழ்ச்சியேற்பட்டுள்ளது.

இதேவேளை வன்னி, திகாமடுல்ல, நுவரேலியாத் தேர்தல் மாவட்டங்களில் வாக்காளர் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

லும் (தபால்) முத்திரைகள் வரவில்லை.

முந்திய காலங்களில் கப்பல்களில் வரும் தபால் பொதிகளுடன் யாழ் மாவட்டத்திலுள்ள பிரதான தபால் நிலையங்களுக்கு தபால் திணைக்களத்தினால் பல்வேறு ரூபாய் பெறுமதியான முத்திரைகள், ஏரோ கிராம் என்பன தனித்தனியே அனுப்பி வைக்கப்படுவது வழக்கமாகும்.

# தற்கொலை செய்து கொள்வதில்

# உலகில் முதலிடம் இலங்கைக்கு!

தற்கொலை செய்வதில் இலங்கையே உலகில் முதலிடம் பெறுகிறது பேராதனைப் பல்கலைக்கழக வைத்திய பீட விரிவுரையாளர் பேராசிரியர் ஆர் டி அபயசிங்க ஆய்வு அறிக்கையை ஆதாரமாக வைத்து இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்கொலை அதிகரித்து வருகின்றமைக்கு வழமையான காரணங்களுடன் போதைவஸ்துப் பாவனையும் தற்போது முக்கிய காரணியாக அமைந்துள்ளதாகப் பேராசிரியர் அபயசிங்க தெரிவித்தார்

உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில் மேற்கொண்ட ஆய்விலிருந்தே தற்கொலை செய்வதில் இலங்கை முதலிடம் பெறுகின்ற விடயம் தெரியவந்துள்ளது.

# பருத்தித்துறையில் இறக்கப்படும்

கிளிநொச்சி மாவட்டத்துக்கென குமாரி கப்பலில் வந்த உரம் பருத்தித்துறையில் இறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

குமாரி கப்பலிலிருந்து யாழ் மாவட்டத்துக்கான உணவுப் பொருள்கள் இறக்கும் பணி கடந்த சனிக்கிழமையுடன் முடிவடைந்தது.

இதனையடுத்து கிளிநொச்சி மாவட்டத்துக்கென வந்த உரத்தை இங்கு இறக்குவதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு முன்னர் குமாரி கப்பல் காங்கேசன் துறைக்குச் சென்று விட்டது.

யாழ் செயலக அதிகாரிகளின் முயற்சியையடுத்து இவ் உரம் பருத்தித்துறையில் இறக்கப்படும் என துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

(10)

# கொழும்பு மாநகரில் மட்டும் 5000 வீடுகள் அமையும்

15 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கொழும்பு மாநகரில் 5 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கு 200 கோடி ரூபா செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது

இத் தொகையில் 25 கோடி ரூபா ஜனாதிபதி நிதியத்திலிருந்து வழங்கப்படவுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 1472 ஆசிரிய வெற்றிடங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1472 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

பழுகாமம், மண்டூர், மகிழவெட்டுவான், வாகரை, கன்னன்குடா ஆகிய பின்தங்கிய கிராமப் பகுதிகளிலேயே இந்த வெற்றிடங்கள் உள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

# இந்தியாவில் மூன்று ஆண்டுகளில் 1415 பேர் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டனர்!

இந்தியாவில் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் பல்வேறு தீவிர வாத இயக்கங்களினா லும் 1415 பேர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நாடாளு மன்றத்தில் இத்தகவலைத் தெரிவித்தார்.

சீக்கிய, காஷ்மீர், அஸாம் பிரிவினை வாதப் போராளி கள் மூலமாகவே இக்கடத்த லில் ஈடுபடுவதாகவும் கடந்த மூன்றாண்டுகளில் கடத்தப் பட்டோரில் 252 பேர் கொல் லப்பட்டு விட்டதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித் தார்.

## இராணுவ நடவடிக்கைக்கு திட்டமிடப்படுகிறதாம்

யாழ் மாவட்டத்தில் சில பகுதிகளில் தாக்குதல் நடாத்த இராணுவம் திட்ட மிட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித் துள்ளது.

ஊரடங்கு அமுலில் உள்ள இவ்வேளையில் தாக்குதல் முயற்சியில் இராணுவம் இறங் கலாமென வட பகுதி இரா ணுவ வட்டாரங்களை மேற் கோள் காட்டி இப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

## கதிர்காமக்கந்தன் ஆலய 'ஓம்' விளக்கு அகற்றப்பட்டது

கதிர்காமம் கந்தசாமி கோவிலின் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த 'ஓம்' என்ற பெரிய மின்குமிழ் விஷ மிகளால் அகற்றப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின் றது.

இந்த மின்விளக்கு அகற்ற லுக்கும் அங்குள்ள சில முஸ் லிம் பள்ளிகளுக்குமிடையே தொடர்பு இருப்பதாகவும் இதனால் இந்த சமய அமைச்சு நடவடிக்கையெடுக்க அக்கறை காட்டாமலிருப்ப தாகவும் தெரிவிக்கப்படுகின் றது.

## 114 புதிய சட்டத்தரணிகள் இன்று சத்தியப்பிரமாணம்

இன்று 114 புதிய சட்டத் தரணிகள் சத்தியப் பிரமா ணம் எடுத்துக்கொள்ளவுள்ள னர்.

கொழும்பு உயர்நீதிமன் றத்தில் மூன்று நீதியரசர்கள் முன்னணியில் இவர்கள் சத் தியப் பிரமாணம் எடுத்துக் கொள்வர்.

கொழும்பு சட்டக்கல்லூரி யில் இப்புதிய சட்டத்தர ணிகள் தமது சட்டப்பயிற் சியைப் பெற்றிருந்தனர்.

## மாவீரர் தினத்தை முன்னிட்டு இலவச உணவுப் பொருள்கள்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மாவீரர் நினைவு தினத்தை முன் னிட்டு அப்பகுதியை சேர்ந்த 15 வறுமைப்பட்ட குடும்பங் களை தெரிவு செய்து இலவச உணவுப் பொருள்களை அன் பளிப்பாக வழங்கியுள்ளது.

இதேவேளை மேற்படி சங் கம் மாவீரர் நினைவு நாளை முன்னிட்டு பெரிய அலங்காரப் பந்தல் ஒன்றை சங்க முன்ற லில் அமைத்துள்ளது. (13)

## சார்க்விளையாட்டுப் போட்டிகளில் 200 இந்திய வீரர்கள்

கொழும்பில் நடைபெற வுள்ள சார்க் விளையாட்டு விழாவில் இந்தியாவிலிருந்து 200 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றவுள்ளனர்.

டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை சார்க் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள் ளன.

இந்தியா சார்க் விளையாட் டுப் போட்டிகளுக்கு அதிக மான வீரர்களை அனுப்புவது இதுவே முதல் தடவையென வும் தெரிவிக்கப்படுகின்றது.

## சிறுவர் சேமிப்புக் கணக்கில் $39\frac{1}{2}$ கோடி ரூபா வைப்பு

இலங்கை வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்குகளில் மொத்தம் 39 கோடி 50 லட் சம் ரூபா வைப்பிலிடப்பட் டுள்ளதாக அறிவிக்கப்படு கின்றது.

இதில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா கடந்த ஒரு மாதத்தில் வைப்பிலிடப்பட் டதாகும்.

சிறுவர் சேமிப்புக் கணக்கு களை வைத்திருப்போரில் 5000 அதிர்ஷ்டசாலிகளுக்கு சார்க் விளையாட்டுப் போட் டிகளைக் கண்டுகளிப்பதற்கு ரிய 100 ரூபா பெறுமதியு டைய ரிக்கெட்டுக்களை இலங்கை வங்கி வழங்க முன் வந்துள்ளமையும் இங்கு குறிப் பிடத்தக்கது.

## வட-கிழக்கு பிரச்சினைக்கு விரைவில்தீர்வு – ஜனாதிபதி

'ஒரு சமூகத்தை ஒதுக்கி, அடக்கி ஆளும் நோக்கம் தற் போதைய அரசுக்கு இடை யாது.'

இவ்வாறு ஜனாதிபதி பிரே மதாசா நேற்று முன் தினம் அம்பாறையில் தெரிவித்தார்.

வடக்கு கிழக்குப் பிரச்சி னைக்கு சமூகமான தீர்வு ஒன்றை நான் விரைவில் கண் டெடுப்பேன் எனவும் ஜனா திபதி ...

## பதவி வெற்றிடம்

**யாழ் மாவட்ட கிராமிய அபிவிருத்தி இலாக்கா பதவி வெற்றிடம். தையல் பயிற்றுவிப்பாளர்- (தற்காலிகம்) பெண்கள்**

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ் மாவட் டத்தில் வசிக்கும் இலங்கைப் பெண்பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன. வெற்றிடம் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங் கப்படும். விண்ணப்பமுடிவுத் திகதி 13-12-91 ஆகும் விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பம் மாதிரியே சுய மாக தயாரிக்க வேண்டும். விண்ணப்பங்கள் யாழ் அரசாங்க அதிபர், (கிராமிய அபிவிருத்திக் கிளை) செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அன்றேல் நேரடியாகவோ அனுப்பப் பட வேண்டும். முடிவுத் திகதிக்கு பின் அல்லது வேறு எவரின் பெயருக்கு விலாசமிட்டோ அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**(அ) கல்வித் தகைமை:**

க.பொ.த (சா.த) இல் சுகாதாரம், மனையி யல், தையல் ஆகிய 3 பாடங்களில் 2 பாடத் திற்கு திறமைச் சித்தியும், தமிழ் பாஷை, எண்கணிதம் / கணிதம் / வர்த்தக கணிதம் உட் பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது சி.த.ப (சா.த) இல் 6 பாடங் கள் (2 அமர்வுக்குக் கூடாமல்) சித்தியடைந் திருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத் தில் தையல், மனையியல் பாடங்களில் டிப்...

## பரணி பாடுவோம்

தமிழ் மண்ணை மீட்கின்ற தறுகண் ஆண்மை
தலைக்கொண்டு புறப்பட்ட தமிழர் வீரம்,
இம் மண்ணில் வேறெவரும் விளைத்த தில்லை
இது எங்கள் புலிப்படையின் ஏற்ற மன்றோ!

★ ★

தணியாத தமிழுணர்வே தாக மாகத்
தம்பிரபாகரன்தன் வழியில் யார்க்கும்
பணியாத படைநடத்தும் பான்மை காண்மின்
பாரிலிது போற்படையும் வேறும் உண்டோ!

★ ★

ஒரு தலைவன் சுட்டுவிரல் உயரும் போது
ஓரணியில் திரண்டெழுந்து உறுதி யோடு
வருபகைவர் படைநடுங்க வைக்கும் வேங்கை
வளர்படையின் திறனதனைச் சொல்லப் போமோ!

★ ★

வளமான இளமைநலம் சுகபோ கங்கள்
வற்றாத காதலுணர் வெல்லாம் விட்டு,
நலமான இனவுணர்வு ஒன்றே பற்றாய்
நம்மிளைஞர் யுவதிகளும் களத்தில் நின்றார்!

★ ★

எதிரிகளின் பாசறைகள் எங்கே என்று
எத்திசையும் தேடியவை அருகே சென்று
அதிரவரு பசிலனை ஏவி முற்றாய்
அழித்துவரும் சாதனைகள் கேளும் கேளும்!

★ ★

கழுத்தினிலே நஞ்சதனைக் கட்டிக் கொண்டு;
களத்தினிலே போராடச் செல்லும் வீரர்;
விழுத்தழும்பு பெற்றங்கே வீழ மாட்டார்
விண்செல்வார் வீரரெனப் புகழி னோடு!

★ ★

உலங்குவரு வானூர்தி விமானம் குண்டு
உகுக்கவரும் போதவற்றை நோக்கி யாவும்
கலங்கிடவே கலிபரினை எடுத்துச் சுட்டுக்
கவிழ்த்தவற்றை வீழ்த்துகின்ற காட்சி காண்மின்!

★ ★

சிங்களத்தின் படைவீரர் தமிழீ ழத்தின்
திருமண்ணில் கால்பதிக்க வந்த போது
வெங்களத்தில் கண்ணிவெடிப் பொறியிற் சிக்கி
வெவ்வேறாய்க் கால்தெறித்த விதங்கள் பாரும்!

★ ★

ஊர்வனவும் பறப்பனவும் களத்தே செல்லும்
உரிமைக்காய் எதிரிகளை எதிர்த்துக் கொல்லும்
ஆர்வமுற நீரூத்தும் சரியா சொல்லும்
ஆர்த்தெழுந்து போர்ப்பரணி பாடி வெல்லும்!

★ ★

விடுதலைக்காய்ப் படைநடத்தும் உலகில் உள்ள
வியக்குமிகு இயக்கங்கள் பலவின் மேலாய்
சிறுவிரும்பாய் படைநடத்தி வெற்றி கொள்ளும்
வீங்குபுகழ்; புலிப்படைக்குத் தனியாய் உண்டே!

★ ★

கரும்புலிகள் பாய்ந்துவரும் என்று ஏங்கும்
கயவரணி நாற்றிசையும் கலங்கி ஓடும்
பெருங்கவச வாகனங்கள் புரண்டு சாயும்
பேதலித்துப் படைதிகைத்துச் செல்லும் பின்னே?

★ ★

புலிப்பெண்கள் பாய்ந்துகளம் சென்று செய்த
புல்லரிக்கும் போராற்றல் புவியே போற்றும்

கள் (2 அமர்வுக்குக் கூடாமல்) சித்தியடைந்திருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் தையல், மனையியல் பாடங்களில் டிப்ளோமா பூர்த்தி செய்தும் இருக்க வேண்டும்

**குறிப்பு:**

மேற்படி தகைமையுடன் கிராமிய அபிவிருத்தி இலாகாவினால் நடாத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் பயிற்சி பெற்று சான்றிதழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வயதெல்லை:**

1991 இல் 18 க்கும் 40க்கும் உள்ளிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:**

நாள் ஒன்றுக்கு 53/70 உம் சகல அரசபடிகளும்.

**வெற்றிடம் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள்:**

(1) சாவகச்சேரி (3) வேலணை
(2) தெல்லிப்பளை (4) பருத்தித்துறை

இப் பதவிகள் தற்காலிகமானது. எக்காரணம் கொண்டும் நிரந்தரமாக்கப்படமாட்டாது.

ஒப்பம்
க.மாணிக்கவாசகர்

அரசாங்க அதிபரும் மாவட்ட ஆணையாளரும்
யாழ் மாவட்டம்.

11061

---

யாது.'

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாசா நேற்று முன் தினம் ... ஒன்றை நான் விரைவில் கண்டேயாகுவேன் எனவும் ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

---

## விவசாயக் கழகம்

மறவன்புலோ கிழக்கில் இளம் விவசாயக் கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மறவன்புலோ கிழக்கு சகலகலாவல்லி வித்தியாலய மண்டபத்தில் கைதடி விவசாய போதனாசிரியர் சி. துரைராஜா தலைமையில் கடந்த 23 ஆம் திகதி காலை 9 மணியளவில் இக் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (18)

## வீரப்பனைப் பிடிக்க அதிரடிப்படை

தமிழ்நாடு - கருநாடகா மாநில எல்லைப் புறக் காடுகளில் மறைந்திருக்கும் சந்தன மரக் கடத்தல்காரனான வீரப்பனைப் பிடிப்பதற்குச் சேலத்திலிருந்து விசேட அதிரடிப் படையொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

---

புலிப்பெண்கள் பாய்ந்துகளம் சென்று செய்த
புல்லரிக்கும் போராற்றல் புலியே போற்றும்
சலிப்பின்றி அவர்செய்த சமரின் கீர்த்தி
தமிழீழ வரலாற்றில் தனியாய் நிற்கும்!

★ ★

ஆகாயக் கடல்வெளியில் அஞ்சா காசம்
ஆர்க்கின்ற எதிரிகளின் குண்டு மேகம்
போராடச் சலிக்காத புலிகள் வேகம்
புறங் கண்டு களம்வென்ற பரணி பாடும்

— முருகனடியான்

---


## சிறு விளம்பரம்

### வைத்தியம்

தீவகத்தில் ஊர்காவற்துறை வேலணை, புங்குடுதீவில் இயங்கிவந்த பாக்கியம் குழந்தைகள் வைத்தியசாலை தற்காலிகமாக கல்வியங்காட்டிலிருந்து 1 மையில் தொலைவிலுள்ள இருபாலை சந்தி குமரபுரம் இல்லத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. பாக்கியம் ஊர்காவற்றுறை

11058


---

# ஈராக்கில் மீண்டும் உணவுப் பற்றாக்குறை; வாங்குவதற்கும் அங்கு நிதி இல்லை!

மீண்டும் கடும் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையிடம் ஈராக் புகார் செய்துள்ளது.

சுமார் 10 ஆயிரம் கோடி ரூபா பெறுமானமுள்ள உணவுப் பொருள்கள் உடனடியாகத் தேவைப்படுவதாகவும் ஆனால் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான நிதிவசதி தன்னிடமில்லை எனவும் ஈராக் அறிவித்துள்ளது.

ஈராக்கிடமிருந்து எரிபொருள் உட்பட எந்தப் பொருளையும் பிற நாடுகள் வாங்குவதற்கு விதிக்கப்பட்ட தடை தொடர்வதால் தன்னிடமுள்ள பொருள்களை விற்கவோ வாங்கவோ முடியாத நிலையில் ஈராக் உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## திருடியவர் பிடிபட்டார்

தேநீர்க் கடை உரிமையாளர் ஒருவரின் சைக்கிளை திருடிய வாலிபர் ஒருவர் அதை விலைபேசி விற்க முற்பட்ட வேளையில் பண்டத்தரிப்பில் விடுதலைப்புலிகளால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார். (13)

## 4 பாடங்களில் 'ஏ'

கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த 14 மாணவர்கள் கடந்த ஆண்டில் நடைபெற்ற ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களிலும் 'ஏ' சித்தியைப் பெற்றுள்ளனர்.

# மருந்து விற்பனை சீராக நடைபெற அரச அதிபர் தலைமையில் குழு

ஆங்கில மருந்துகள் விற்பனை தொடர்பாக யாழ் செயலகத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

மருந்து விற்பனையாளர்கள் தனியார் வைத்தியசாலை பிரதிநிதிகள், சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் வட இலங்கை வைத்திய சங்க பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

யாழ் அரசாங்க அதிபர் தலைமையில் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு சீராக மருந்து கிடைப்பதற்கும், ஆங்கில மருந்து தட்டுப்பாட்டை நீக்கவும் ஆறு முக்கிய தீர்மானங்களும் இங்கு எடுக்கப்பட்டன.

மருந்து விலைப் பட்டியல் தயாரித்தல் கள்ளச்சந்தைக்கு செல்லாது தடுத்தல், எல்லா இடங்களிலும் ஒரே விலை என்பன இத்தீர்மானத்தில் முக்கியமானவையாகும். (25)

## ஏற்புவலி தடுப்பூசி மருந்துகளுக்கு ஆஸ்பத்திரிகளில் தட்டுப்பாடு

யாழ் பெரியாஸ்பத்திரியில் தினமும் நாய் கடிக்கு இலக்காகி பத்துப் பேருக்கு மேல் சிகிச்சைபெற வருகின்றனர்,

இதேபோல விசகடிக்கு இலக்காகியவர்களும், வேறு காயங்களுக்கு உள்ளானவர்களுமாக சுமார் இருபது பேர் வரை சிகிச்சைக்காக தினமும் வருவதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இவர்களுக்குரிய ஏற்புவலி தடுப்பூசி மருந்துகள் முடிவடைந்துள்ளதாகவும் கடந்த முறை கப்பலில் இவை அனுப்பிவைக்கப்படவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன,

இதேபோல குடாநாட்டின் ஏனைய ஆஸ்பத்திரிகளிலும் இந்த மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுவதால் அப்பகுதி மக்களும் யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்து ஏமாற்றத்துடன் செல்கின்றனர். 07

## அமெரிக்க மனித உரிமை அதிகாரிகள் கொழும்பில்

ஸ்ரீலங்காவின் மனித உரிமை மீறல்கள் குறித்து அறிக்கை தயாரிக்கவென அமெரிக்க உள்விவகார திணைக்கள அதிகாரிகள் கொழும்பு வந்துள்ளனர்,

வருடந்தோறும் இவர்கள் வெளியிடும் மனித உரிமைகள் மீறல்கள் குறித்த கையேட்டில் ஸ்ரீலங்காவில் தாம் சேகரித்த தகவல்களை சேர்க்க திட்டமிட்டுள்ளனராம்

## கல்லூரி மாணவி மீது கொழும்பில் துப்பாக்கிச் சூடு

17 வயது மாணவி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இம் மாணவி பெற்றோருடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்த போது கோட்டைப் பகுதியில் உள்ள தடைமுகாமில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்துப்பாக்கிச் சூடு முக்கிய புள்ளி ஒருவரைக் குறிவைத்துத் தீர்க்கப்பட்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

## தொண்டாவின் சமரச முயற்சிக்கு இந்தியப் பிரதமர் வரவேற்பு!

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நிகழ்ந்து வரும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அமைச்சர் தொண்டமான் எடுத்து வரும் முயற்சிகளை இந்திய அரசு வரவேற்றுள்ளதென்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் தொண்டமானின் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் இருந்து இது தெரியவருகிறது. என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து வரும் அகதிகளை அவர்களின் கிராமங்களில் வசிக்க விடுதலைப் புலிகள் அனுமதிக்கவேண்டும் என்றும் இவ்விடயம் தொண்டமான் புலிகளுடன் நடத்தும் போதும் பேச்சுவார்த்தைகளின் போது எடுக்கப்பட்டு இத் தொண்டமான் புலிகளை இதற்குச் சம்மதிக்க வைக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தொண்டமானிடம் கோரியதாகத் தெரிகிறது என்றும் இச் செய்தி மேலும் கூறுகிறது.

இந்தியத் தூதுவர் ஜே.என் தீட்சித்தும் இப் பேச்சுவார்த்தைகளின் போது பிரசன்னமாக இருந்தார்.

## குண்டுவீச்சு

மணலாறில் நேற்றுக் காலை அவ்ரோ விமானம் குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்தியது.

நேற்று காலை 11 மணியளவில் நாயாறு, அலம்பில், செம்மலை பகுதிகளில் குண்டுகள் வீசப்பட்டன, மீண்டும் மாலையும் குண்டுவீச்சு நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினமிரவும் நாயாறில் குடிமனைகள் மீது விமானத்தாக்குதல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## இறைச்சிக்கடை வியாபாரிகள் கூட்டம்

யாழ் மாவட்டத்தில் உள்ள மாநகரசபை பிரதேச சபை, பட்டினசபை, நகரசபை மற்றும் சபைகளின் கீழ் இயங்கும் அனுமதி பெற்றுள்ள ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி வியாபாரம் செய்யும் வியாபாரிகள் அனைவரையும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சின்னக்கடையில் உள்ள காரியாலயத்தில் நடைபெறும் கூட்டத்தில் தவறாது பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர்.

### கொம்மடிப்பாதை ...

மதிக்கப்பட்டுள்ளார்.

அப்பகுதியால் வந்துகொண்டிருந்த வள்ளங்களில் இரண்டு இதனால் பலத்த சேதமடைந்தன.

வள்ளங்களில் வந்தவர்கள் பலர் நீரில் குதித்துத் தப்பினார்கள் (07)

### தலைவர் ...

கோயிலில் நவசக்தி அர்ச்சனையும் விசேட அபிஷேகங்களும் நடாத்தப்பட்டன

ஏராளமான பொது மக்கள் இப் பூஜைகளில் கலந்துகொண்டார்கள் அபிஷேகத்தைத் தொடர்ந்து இரவு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

### நடராஜன் ...

நேற்றுக்கூடிய தி. மு. க நிர்வாகக் குழுவும் தமிழக அரசு 'தடா' எனப்படும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை தவறாக பயன்படுத்துவதாக தீர்மானம் நிறைவேற்றியதும் குறிப்பிடத்தக்கது

### மாவீரர் ...

சுந்தியிலிருந்து ஆரம்பமாகும்.

இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சிறப்புரைகள் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### மன்னார் ...

தேவி (26), பிரான்ஸிஸ் அஞ்சலாதேவி (24) ஆகிய சகோதரிகளும், ஜெகதீஸ்வரன் சொரூபன் (06), ஜீவேசானந்தன் ஹரிஹரன் (10), கணபதி பிரபாகரன் (08) ஆகிய சிறுவர்களும் பலியாகினர்.

வி விஜயலட்சுமி, த. சுரேஷ், செ, பாலசந்திரன், நா ராதா ஆகியோர் காயமடைந்தனர்

### போரா ...

சுக்களில் பங்கு கொள்வதாம் என்றும் தயார்

எமது கொள்கையை, எமது நிலைப்பாட்டை, எமது தேசிய போராட்டத்தின் ஆதாரமான அடிப்படைகளை, சிங்கள அரசிற்கும் உலகிற்கும் எடுத்து விளக்க பேச்சுவார்த்தைகள் வாய்ப்பளிக்கும்.

நாம் இனத்துவேசிகள் அல்லர். போர் வெறி கொண்ட வன்முறையாளர்களும் அல்லர் நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ விரோதிகளாகவோ கருதவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கின்றோம். சிங்களப் பண்பாட்டை கௌரவிக்கின்றோம். சிங்கள மக்களின் தேசிய வாழ்வில், அவர்களது சுதந்திரத்தில் நாம் எவ்விதமும் தலையிட விரும்பவில்லை.

### மகத்துவம்

இன்றைய தினத்தை மாவீரர் நாளாக, தியாகிகளின் திருநாளாக எமது தேசத்தின் பெருநாளாக நாம் கொண்டாடுகின்றோம்

எமது மண்ணுக்காக, எமது மக்களுக்காக, தமது இன்னுயிரை அர்ப்பணித்த தியாகி

### தமிழக ...

யாளராக இருந்த இவர் கருணாநிதியின் ஆட்சிக்காலத்தில் பதவி உயர்வு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மடு ...

வும் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள அகதி மாணவர்கள் தொடர்ந்தும் மரங்களின் கீழ் இருந்தே கல்வி கற்கின்றனர்

---

கின எந்தவொரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத சவால்களை, சோதனைகளை, எதிர்பாராத திருப்பங்களை இந்த வரலாற்று ஓட்டத்தில் நாம் எதிர் கொண்டோம்.

### விரோத சக்திகள்

எமது போராட்டத்திற்கு எதிராக பல்வேறு விரோத சக்திகளும் துரோக சக்திகளும் இணைந்து செயற்பட்டன. எமது வரலாற்று எதிரியுடன் வலிமை மிகுந்த வல்லரசுகளும் எமக்கு எதிராக அணி சேர்ந்து கொண்டன. சதிகளாக, நாசச் செயல்களாக, நம்பிக்கைத் துரோகங்களாக, ஏமாற்றும் படலங்களாக எமதியக்கம் பல நெருக்கடிகளை எதிர்கொண்டது. அலை அலையாக எழுந்த எதிரியின் படையெடுப்புக்களை ஒருபுறமும், அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பை மறு புறமுமாக நாம் தனித்து நின்று எதிர் கொண்டோம். பல கட்டங்களில் எமதியக்கம் அழிவின் விளிம்புக்கு தள்ளப்பட்டது.

### இலட்சிய உறுதி

புயலாக எழுந்த இந்தப்

றது. கொந்தளிப்பான பல சூழ் நிலைகளுக்கு முகம் கொடுக்கின்றது. விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் ஒரு ரண களம் சாவையும் அழிவையும் துன்பத்தையும் பரிசாகக் கொடுத்துத்தான் நாம் சுதந்திரம் எனும் சுவர்க்கத்தைக் காண முடியும். கரடு முரடான பாதைகள் நிறைந்த இந்த இலட்சியப் பயணத்தில் எமக்கு ஒரேயொரு ஊன்றுகோலாக இருப்பது எமது உறுதிதான்.

### திருப்பம்

இன்று ஒரு புதிய நெருக்கடியான வரலாற்றுத் திருப்பத்தை நாம் சந்தித்து நிற்கின்றோம்.

எதிரிப் படைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகையிட்டு நிற்கின்றன. பொருளாதாரத் தடைகளை இறுக்கி உணவுப் பஞ்சத்தை உண்டு பண்ண எதிரி முனைகின்றான். இராணுவ அழுத்தம் பொருளாதார நெருக்குதல் என்ற ரீதியில் இரு முனைகளில் எமது மக்கள் மீது யுத்தம் ஒன்று

எமது மக்களின் வேண்டுகோளை சிங்கள அரசு எப்பொழுது அங்கீகரிக்கின்றதோ அப்பொழுது தான் ஒரு நிரந்தர சமாதானமும் தீர்வும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

### சிங்கள ஆதிக்கவெறி

இராணுவ அடக்கு முறை என்ற அணுகுமுறை மூலம் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை சிங்கள அரசு இன்னும் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை இராணுவ மேலாதிக்கத்தை எட்டிப் பிடிக்க வேண்டும், தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க வேண்டும், என்ற ஆதிக்க வெறி இன்னும் சிங்கள ஆளும் வர்க்கத்திடமிருந்து அகன்று போனதாகத் தெரியவில்லை.

### தவறைச்சந்திக்கநேரும்

இராணுவ ஆதிக்கத்திற்கும் அழுத்தத்திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக்கொடுத்ததில்லை கொண்ட கொள்கையில் நாம் என்றுமே

தீர்மானம் நிறைவேற்றியதும் குறிப்பிடத்தக்கது

இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழீழ காவல்துறை காவலர் பதவிக்கான விண்ணப்பம்

கீழ்க் காணும் தகைமையுடையவர்கள் தமிழீழ காவல் துறையின் காவலர் பதவிக்கான விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் 29-11-91 வெள்ளிக்கிழமை நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழீழ காவல் துறையின் தலைமைக் காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.

| | |
|---|---|
| வயது:- | 18 முதல் 30 வரை |
| கல்வித் தகைமை:- | க. பொ. த. (சாதாரணம்) |
| உயரம்:- | 5 அடி முதல் 6 அடி வரை |

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

11062

எமது மண்ணுக்காக, எமது மக்களுக்காக, தமது இன்னுயிரை அர்ப்பணித்த தியாகிகளை இன்று நாம் எமது இதயத்து ஆலயங்களில் நினைவு கூர்ந்து கௌரவிக்கின்றோம்.

ஒரு புனித இலட்சியத்திற்காக வாழ்ந்து, அந்த இலட்சியத்திற்காகப் போராடி, அந்த இலட்சியத்தை அடைவதற்காக தமது வாழ்வைத் தியாகம் செய்த இந்த மாவீரர்கள் மகத்துவமானவர்கள்.

## அற்புதம்

இந்த மாவீரர்களது அற்புதமான இலட்சிய வாழ்க்கை அவர்களது தியாகங்கள், அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள் இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச் செல்கின்றது. எமது வீர சுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் வியர்வையால், கண்ணீரால் எழுதப்பட்டது.

எமது விடுதலை இயக்கம் மிகவும் நீண்ட கடினமான, நெருக்கடிகள் நிறைந்த ஒரு வரலாற்றுப் பயணத்தைத் தொடர்ந்து வருகின்றது. உல

## இலட்சிய உறுதி

புயலாக எழுந்த இந்தப் பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள இரும்பை ஒத்த மன உறுதி தேவைப்பட்டது.

இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக மனித மலைகளாக உறுதியோடு நின்ற மாவீரர்களை நான் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதி தான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன.

எமது போராட்டம் எத்தனையோ சவால்களுக்கு ஈடுகொடுத்து தனது விடுதலைப் பயணத்தில் வெற்றி நடை போட முடிந்தது என்றால் அதற்கான அடிப்படைக் காரணம் எமது இலட்சிய உறுதிதான் என்பதை நான் இட்டவட்டமாகக் கூறுவேன். நீண்ட வரலாற்று அனுபவத்தில் நான் கண்டு உணர்ந்த உண்மை இது.

ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவழிகளைச் சந்திக்கின்றது. பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்

நெருக்குதல் என்ற ரீதியில் இரு முனைகளில் எமது மக்கள் மீது யுத்தம் ஒன்று ஏவப்பட்டிருக்கின்றது. எமது போராட்டத்தின் அசைக்க முடியாத அரணாக நிற்கும் எமது மக்களின் மன பலத்தை உடைத்துவிட எதிரியானவன் எல்லாவித தந்திரோபாயங்களையும் கடைப்பிடிக்கலாம் என்பது எமக்குத் தெரியாதது அல்ல.

எமது மக்கள் சிங்கள இனவாத அடக்குமுறையின் அக்கினிப் பட்டறையில் புடம் போடப்பட்டவர்கள் அரச பயங்கரவாதத்தின் அகோரங்களைச் சந்தித்தவர்கள். துன்பச்சிலுவையை சதா சுமந்து பழகியவர்கள், மரணத்தின் நிழலில் படுத்துறங்கி வாழ்பவர்கள்.

## எமது அபிலாசை

நாம் எமது வரலாற்றுத் தாயகத்தில் ஒரு தேசிய மக்கள் இனம் என்ற அந்தஸ்துடன் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவத்துடன் வாழ விரும்புகின்றோம் ''எம்மை நிம்மதியாக வாழ விடுங்கள்' என்பதுதான் எமது மக்களின் எளிமையான அரசியல் அபிலாசை. இந்த நியாயமான நீதியான, நாகரிகமான

மென்றுமே [illegible] கொடுத்ததில்லை. கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்ததில்லை எமது இயக்கத்தின் இந்த உறுதிப்பாட்டை உலகத்தின் மிகப் பெரிய இராணுவமே பரீட்சித்துப் பார்த்து தோல்வி கண்டது. சிங்கள இராணுவமும் இந்த வரலாற்றுத் தவறை சந்திக்கத்தான் நேரிடும்.

எனது அன்பார்ந்த மக்களே நீண்ட விடுதலைப் பயணத்தின் சோர்வுகள் எம்மை ஆட்கொள்ளலாம் போராட்ட வாழ்வின் பெரும் சுமைகள் எம்மை அழுத்திப் பிடிக்கலாம் மேலும் பழுக்கள் எம்மீது சுமத்தப்படலாம்.

ஆனால் நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக் கொண்டு உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால் எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது.

வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதி தான் வலுமிக்க ஆயுதம்.

இன்று எமது மாவீரர்களின் கல்லறைகளிலிருந்து ஒலிக்கும் சுதந்திரக் கீதமும் உறுதியின் உன்னதத்தைத் தான் பாடுகின்றது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிரைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் வல்லிவங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 27.1.1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது